DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

SC.No.	: 123/2024
P.W.	: 4
Name	: திரு. சசிக்குமார்
Father Name	: திரு.டி.ராஜேந்திரன்
Village	:
Taluk	:
Caste	:
Calling	:
Religion	:
Age	: 32

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.09.2025.

எதிரிகள் ஆஜர்

<u>முதல் விசாரணை :-</u>

நான் கோபி கலிங்கியம் "அ" கிராமத்தில் கி.நி..அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13-05-2024 ம் அன்று பகல் 12 மணி அளவில் நானும், எனது கிராம உதவியாளரும் அலுவலகத்தில் இருக்கும்போது சிறுவலூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் எங்கள் அலுவலகத்திற்கு வந்து எங்கள் கிராம எல்லைக்குட்பட்ட வேட்டைக்காரன்கோவில் காமராஜர் நகர், ஒயின்ஷாப்பிற்குள் கொலை நடந்தது சம்பந்தமாக எதிரிகள் இருவரையும் கைது செய்யவேண்டும்

என்றும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டி இருப்பதால் எங்கள் இருவரையும் சாட்சிகளாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். காவல் ஆய்வாளர் எங்கள் இருவரையும் விக்கி (எ) விக்னேஷ் என்பவரது வீட்டிற்கு அழைத்துசென்றார். ஒப்புதல் வாக்குமூலம் கேட்டார்கள். மேற்படி இருவரும் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்துகள் செய்தோம். அதன்பின்னிட்டு கைப்பற்றுதல் மகசர் எழுதினார்கள். விக்கி (எ) விக்னேஷ் அரைக்கை டி-சர்ட் ஒன்றையும், நீலநிற பேண்ட் ஒன்றையும், மற்றொருவர் வெள்ளைநிறம் மற்றும் ப்ளு கலர் டி-சர்ட் ஒன்றையும், ப்ளு கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றையும் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்துசெய்தோம். **ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 1வதாக உள்ள சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்கள் மட்டும் அ.சா.ஆ.5, 6. கைப்பற்றுதல் மகசர்கள் அ.சா.ஆ.7 மற்றும் 8. ரத்தக்கறை படிந்த சந்தன கலர் அரைக்கை சட்டை சா.பொ.3. ரத்தகறை படிந்த ப்ளு கலர் பேண்ட் சா.பொ.4. வெள்ளைநிற மற்றும் ப்ளு கலர் முழுகை டி-சர்ட் சா.பொ.5. ப்ளு கலர் ஜீன்ஸ் பேண்ட் சா.பொ.6.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 09-07-2022 ம் ஆண்டு கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன். மேற்படி 2022 ம் ஆண்டு முதல் இந்த வழக்கு சம்பவம் நடக்கும்வரை இதற்கு முன்பு பல வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளாக இருந்துள்ளேன் என்றால்

இல்லை இந்த ஒரே வழக்குதான். காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு எங்களது அலுவலகத்திற்கு வந்தார் என்றால் பகல் 12 மணிக்கு. காவல் ஆய்வாளர் என்னிடம் எப்போது வாக்குமூலம் பெற்றார் என்றால் 12.15 மணி இருக்கும். போலீசார் என்னை விசாரிக்கும்போது காவல் ஆய்வாளர் எங்களது அலுவலகத்திற்கு வந்தது குறித்து கொலை வழக்கு தொடர்பாக எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பது குறித்தும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் என் அலுவலகத்தில் எவ்வளவு நேரம் வழக்கு பற்றி கூறினார் என்றால் 10 நிமிடம் இருக்கும். 12.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டோம். எனது உதவியாளரிடமும் காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவம் குறித்து சொன்னாரா என்றால் ஆமாம். வருவாய் நிலை ஆணையின்படி எங்களுக்கு மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் உள்ளது என்றால் உள்ளது ஆனால் கிராம நிர்வாக அலுவலருக்கு இல்லை. அலுவலகத்திலிருந்து அலுவலக வேலையாக என் கிராமத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு குறிப்பாக சர்வே செய்வதற்கும், விசாரணை செய்வதற்கும் செல்லவேண்டும் என்றால் நான் செல்லும் இடம் குறித்து எங்கு பதிவு செய்யப்படும் என்றால் என் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பொது தகவல் பலகையில் எழுதுவேன். அன்றாட நான் செய்யும் பணிகள் குறித்து தகவல் பலகையில் குறிப்பிடும் விபரங்களை எனது உயர் அதிகாரிகளுக்கு அனுப்புவேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக இருப்பது குறித்து எனது உடனடி உயர் அதிகாரியான வருவாய் ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் எனது உதவியாளரை அழைத்துசென்றது சம்பந்தமாக உடனடி உயர் அதிகாரியான வருவாய் ஆய்வாளரிடம் தகவல் தெரிவித்தேனா என்றால் ஆமாம்.. நான்

அலுவலகத்திலிருந்து வெளி அலுவலாக செல்லும்நிலையில் நான் மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் எழுதி பராமரிக்கவேண்டும் என்றும், இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெளியே செல்லும் சமயத்தில் எனது உடனடி உயர் அதிகாரியான வருவாய் ஆய்வாளரிடம் தெரிவிக்கவேண்டும் என்றும், இந்த வழக்கிற்காக தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்த்தாக கூறும் எதிரி விக்னேஷின் உடலில், தலையில் காயம் ஏதாவது பார்த்தேனா என்றால் இல்லை. அவர் அணிந்திருந்த உடையில் ரத்தக்கறை இருந்ததா என்றால் ஆமாம். மேற்படி எதிரியிடம் உடையில் எவ்வாறு ரத்தக்கறை வந்தது என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. சா.பொ.5 சொத்து கைப்பற்றிய மகசரில் Zara என்ற வார்த்தை இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. நான் கிராமநிர்வாக அதிகாரியாக இருக்கும்நிலையில் காவல் ஆய்வாளர் கேட்டுட்கிகொண்டதன்பேரில் அவருக்கு வேண்டிய சாட்சியாக இருந்து கையெழுத்துசெய்துள்ளேன் என்றும், அதனால் தான் எதிரி விக்னேஷிற்கு தலையில் இருந்த காயத்தையும் பார்த்துவிட்டு காயம் எதுவும் பார்க்கவில்லைஎன்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் எப்போதும் எங்கள் அலுவலகத்திற்கு வரவில்லை என்றும், நான்தான் காவல்நிலையம் சென்று அவர்கள் தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் காவல்நிலையத்தில் வைத்தே கையெழுத்துசெய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னநேரத்தில், சொன்ன தேதியில் எங்கும் செல்லவில்லை என்றும், என் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. என்னை ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக இருக்கவேண்டும் என்று காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. குற்ற சம்பவம் எவ்வாறு நடந்தது என்ற வழக்கு விபரத்தை என்னிடம் ஆய்வாளர் சொன்னாரா என்றால் ஆமாம். ஆய்வாளர் சொன்னதன்பேரில் தான் வழக்கு விபரம் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

SC.No.	: 123/2024
P.W.	: 5
Name	: திருமதி. கௌசல்யா
Husband Name	: திரு.குபேந்திரன்
Village	:
Taluk	:
Caste	:
Calling	:
Religion	:
Age	: 29

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.09.2025.

எதிரிகள் ஆஜர்

முதல் விசாரணை :-

நான் கலிங்கியம் "அ" கிராமம் கிராம உதவியாளராக பணியாற்றி வருகிறேன். அ.சா.4 மேற்படி கிராமத்தில் கி.நி.அலுவலர். 13-05-2024 அன்று மதியம் 12 மணி அளவில் நாங்கள் அலுவலகத்தில் இருந்தபோது சிறுவலூர் காவல்நிலைய ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும், மற்றொரு காவலரும் எங்களது அலுவலகத்திற்கு வந்து எங்களது கிராம எல்லைக்குட்பட்ட ஒயின்ஷாப்பில் 12-05-2024 அன்று பாலுசாமி என்பவரை விக்னேஷும், கௌதம் ஆகியோர்களுக்கும்

தகராறு ஏற்பட்டு விக்னேஷ் பாட்டிலால் பாலுச்சாமியின் தலையில் அடித்ததால் அவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், அதனால் அவர் இறந்துவிட்டதாகவும், விக்னேஷ் வீட்டிற்கு எங்களை அழைத்துசென்றார்கள் அங்கு சென்று பார்க்கும்போது அங்கு விக்னேஷ்-ம் கௌதமும் இருந்தார்கள், எஸ்.ஐ பேசினார் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். மேற்படி இருவரும் அவர்களே முன்வந்து குற்ற சம்பவத்தை ஒப்புக்கொண்டார்கள். எஸ்.ஐ சார் குறிப்பாக இந்த டிரஸ் தான் போட்டிருந்தீர்களா என்று கேட்டார் இல்லை நேற்று வேறு உடை அணிந்திருந்ததாகவும், அதில் ரத்தக்கறை படிந்ததாகவும் சொன்னார்கள். டிரஸ் எங்கே என்று கேட்ட சமயம் வீட்டில் வைத்துள்ளதாகவும் சொன்னார்கள். அதை காண்பிக்குமாறு கேட்டார். மேற்படி இருவரும் அவர்கள் அணிந்திருந்த உடைகளை எடுத்து வந்து காண்பித்தார்கள். சந்தன கலர் டி-சர்ட், ஜீன்ஸ்பேண்ட், ப்ளு கலர் டி-சர்ட், ப்ளு கலர் ஜீன்ஸ் ஆகியவற்றை எடுத்துக்கொடுத்தார்கள். எங்கள் முன்னிலையிலேயே மேற்படி இருவரும் கையெழுத்துபோட்டார்கள். அதில் நானும், அ.சா.4 ம் சாட்சிகளாக கையெழுத்துபோட்டோம். **1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. 2 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசர்கள் அ.சா.ஆ.9 மற்றும் 10 ஆவணங்களில் உள்ள 2 வதாக உள்ள சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையதுதான்.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எப்போது கிராம உதவியாளராக பணியில் சேர்ந்தேன் என்றால் 2016 ல்.

2016 ம் ஆண்டிலிருந்து 2024 ம் ஆண்டு வரை பல்வேறு வழக்குகளில் கிராம நிர்வாக அலுவலருடன் சாட்சியாக சென்றுள்ளேன் என்றால் ஆமாம். எங்களது அலுவலகத்திற்கு வந்ததாக கூறும் காவல் ஆய்வாளரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. உதவி ஆய்வாளரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இருவரை தவிர்த்து பெண் போலீஸ் அதிகாரி யாராவது வந்தார்களா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு வந்ததாக சொல்கிறேன் என்றால் பகல் 12 மணிக்கு. எங்களது அலுவலகத்திற்கு வந்ததாக கூறும் 2 காவல் அதிகாரிகளும் வழக்கு சம்பவத்தை கிராம நிர்வாக அதிகாரியிடம் கூறினார்கள் என்றால் சரிதான். அவரிடம் சொன்னபிறகு தான் என்னிடம் வழக்கு விபரங்களை சொன்னார் என்றால் ஆமாம். எவ்வளவு நேரம் அவ்வாறு சொன்னார்கள் என்றால் 10 நிமிடங்கள் இருக்கும். என்னிடம் 10 நிமிடமும், கி.நி.அதிகாரியிடம் 10 நிமிடமும் பேசினார்கள் என்றால் இல்லை இருவரிடமும் மொத்தமாக 10 நிமிடங்கள் பேசினார்கள். வாய்வழியாக வழக்கு விபரங்களை சொன்னார்களா அல்லது எழுத்துமூலமாக சொன்னார்களா என்றால் வாய்மொழியாகத்தான் சொன்னார்கள். எங்களது அலுவலகத்திற்கும், எதிரிகள் இருந்ததாக கூறும் அவர்களின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1 கி.மீ தூரம். நாங்கள் இருவரும் போலீஸ் வாகனத்தில் சென்றோமா என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். போலீசார் எதிரிகளின் முகவரிகள் எழுதிக்கொடுத்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் எழுதிக்கொடுத்த முகவரியின் அடிப்படையில் தான் எதிரிகள் இருந்ததாக கூறும் இடத்திற்கு சென்றோமா என்றால் ஆமாம். நான் மேற்படி இடத்திற்கு செல்வது குறித்து கி.நி.அ பராமரித்து வரும் பதிவேட்டில் எழுதினேனா என்றால் இல்லை. திடீரென்று அழைத்ததால்

எழுதவில்லை. சம்பவ இடத்திற்கு சென்று வந்தபிறகாவது எழுதினோமா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 ல் Zara என்று வார்த்தை இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எப்போது வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் மதியம் 3 மணி இ,ருக்கும். பகல் 12 மணி முதல் 3 மணி வரை போலீசார் அங்கு தான் இருந்தார்கள் என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் வைத்துதான் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். எதிரி விக்னேஷ் என்பவர் அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த சந்தனகலர் அரைக்கை சட்டையையும், ப்ளு கலர் பேண்ட்டையும் மதியம் 2.45 மணிக்கு கைப்பற்றியதாக போலீசார் என்னை விசாரிக்கும்போது சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இறந்துபோன பாலுச்சாமி என்பவர் வேட்டைக்காரர் கோவில் பகுதியை சேர்ந்தவர் என்றும், எதிரிகள் தங்கமலை கரடு பகுதியை சேர்ந்தவர் என்றும் போலீசார் சொன்னதன்பேரில்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அங்கு நடந்ததாக கூறும் வழக்கு விபரங்களையும் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் அனைத்தும் போலீசார் எங்களுக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரிக்கு ரத்தக்காயம் இருந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நானும், அ.சா.4 ம் எதிரிகளை கைது செய்ததாக கூறும் இடத்திற்கு செல்லவில்லை என்றும், அவர்கள் எங்கள் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்பதால் தான் எதிரிகளுக்கு ஏற்பட்டிருந்த காயத்தையும் நாங்கள் பார்க்கவில்லை என்றும், நானும், அ.சா.4 ம் போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் காவல்நிலையம் சென்று அவர்கள் தயாரித்து வைத்திருந்த ஆவணத்தில் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில்

சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம் என்றும், தற்போது போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் எதிரிகள் எங்கள் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன்பேரில் சொத்துக்களை மகசரில் கைப்பற்றியதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

SC.No.	: 123/2024
P.W.	: 6
Name	: திரு. பச்சியப்பன்
Father Name	: திரு.பெரியண்ணகவுண்டர்
Village	:
Taluk	:
Caste	:
Calling	:
Religion	:
Age	: 50

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.09.2025.

எதிரிகள் ஆஜர்

<u>முதல் விசாரணை :-</u>

நான் கலிங்கியம் சின்னகுளத்தில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். ஒரு ஆண்டிற்கு முன்பாக ஒருநாள் காமராஜர் நகருக்கு மருந்து வாங்குவதற்காக சென்றேன். பாலுச்சாமி என்பவருக்கு ரத்தம் வந்துகொண்டிருந்தது. அது குறித்து அவரது மகனுக்கு போன் செய்து சொன்னேன். பின்னிட்டு பாலுச்சாமி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பாலுச்சாமியை எவ்வளவு ஆண்டுகளாக எனக்கு தெரியும் என்றால் 5, 6

ஆண்டுளாக தொயும். அவரது வீடு எங்குள்ளது என்று தெரியுமா என்றால் ஆமாம். எனக்கு தெரிந்த பாலுச்சாமிக்கு ரத்தம் வந்துகொண்டிருந்ததாக கூறும் நிலையில் அவரை ஏன் வீட்டிற்கு அழைத்துசெல்லவில்லை என்றால் அவர் அவரது மகனுக்கு போன் செய்து தகவல் சொல்லுமாறு சொன்னார் அதனால் சொன்னேன். அவரது மகனின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவரது போன் நெம்பர் தெரியுமா என்றால் தெரியும் தற்போது நினைவில்லை. என் போனிலிருந்து அவருக்கு அழைத்தேனா என்றால் ஆமாம். எனது எண் என்னவென்றால் 9578157025. எத்தனை மணிக்கு அவ்வாறு தகவல் சொன்னதாக சொல்கிறேன் என்றால் இரவு 7.30 மணி இருக்கலாம். அவரிடம் அவருடைய தகப்பனார் ரத்தக்கறையுடன் இருப்பதாக தகவல் சொன்னேனா என்றால் ஆமாம். நான் பார்க்கும்போது பாலுச்சாமி சுயநினைவுடன் இருந்தார் என்றால் ஆமாம் என்னிடம் பேசினார். நடந்துவந்தாரா என்றால் ஆமாம். எந்த வண்டியில் அவரை அனுப்பிவைத்தோம் என்றால் வண்டி எனக்கு தெரியாது, பைக்தான். பைக்கை ஓட்டிசென்றவர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அ.சா.1ஐ தெரியாது என்றும், அவருடைய போன் நெம்பரும் தெரியாது என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால்சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

SC.No.	: 123/2024
P.W.	: 7
Name	: திரு. பிரகாசம்
Father Name	: திரு. அம்மாசையப்பன்
Village	:
Taluk	:
Caste	:
Calling	:
Religion	:
Age	: 59

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.09.2025.

எதிரிகள் ஆஜர்

முதல் விசாரணை :-

நான் கோபிசெட்டிபாளையம் ஓலப்பாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன பாலுச்சாமி எனது அண்ணன். 12-05-2024 அன்று அவர் பாருக்குசென்ற சமயம் ஒரு நபர் அவரை பீர் பாட்டிலால் அடித்துவிட்டதாகவும், அதனால் அவர் மயக்கமாகியிருந்ததாகவும், 2 நபர்கள் அவரை அழைத்து வந்து அவரது மரக்கடையில் விட்டதாகவும், அவரை அபி ஆஸ்பத்திரிக்கு அழைத்துசென்றபிறகு மேல்சிகிச்சைக்காக பெருந்துறை அரசு

மருத்துவமனைக்கு அழைத்துசென்ற சமயம் அவர் போகும்வழியிலேயே உடல்நிலை அதிகமாக பாதிக்கப்பட்டதால் அவரை கோபி அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்துவிட்டதாகவும், அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் வரும்வழியிலேயே இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். மேற்படி சம்பவங்கள் எனக்கு நேரில் தெரியாது. போலீசார் அவரது உடலை பிரேத விசாரணை மேற்கொண்ட சமயத்தில் நான் சாட்சியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.